378
378
1-8-53
24 FEB 1953

கம்யூனிஸக்கொள்கையின்
தந்தை

காரல் மார்க்ஸ்

(கதையும், பாட்டும்)

★

தொழிற்சங்கத்தில் ஒலிபரப்பப்பட்டது.

புத்தொளி மன்றம்

பொன்மலை.

1952] : : [விலை 2 அணா

V2,4 x124
N52
181790

முன்னுரை--

புரட்சிப் பூமலர, புது உலகப் பூங்காவில் புதுமைக் கருத்துக்கள் கொண்ட புத்தகங்கள் பலவற்றை வித்துக்களாக்கி வெளியிட புத்தொளி மன்றம் முன்வந்திருக்கிறது. அதன் முதல் முயற்சியே இச்சிறு உரை நடை பாடல் நூல். இதை ஆர்வமுள்ள இளைஞர் மட்டுமல்ல, யாவருமே வரவேற்று, பின்னைய வெளியீடுகளுக்கு பேருதவிபுரிவார்கள் என்று எண்ணுகின்றேன்.

பதிப்பாசிரியர்,

திகதி 1-12-52 — **வாளேந்தி,**

பொன்மலைப்பட்டி.

★

என்னுரை--

ஓடுகின்ற உணர்ச்சி வெள்ளம் ஒருமுகப்பட்டு தேங்கி நின்றாற்போல—என் பேனாவின் பாய்ச்சலில் கம்யூனிஸத்தின் கர்த்தா கார்ல் மார்க்கிஸின் வரலாறு அகப்பட்டு திக்குமுக்காடியது.

கார்ல் பெரியாரின் கண்ணீர் வாழ்வின் சில சம்பவங்களை ஆதாரமாக வைத்துக் கொண்டு என் கற்பனையின் துணையால் நான் எழுதிய முதல் உரை நடை பாடலிது. குறைகளிருக்கலாம்; மன்னித்து எனது ஊக்கத்தை உறுதிப்படுத்த உங்களை வேண்டுகிறேன்.

மற்றும் இந்நூலை வெளியிட முன்வந்த ஆசிரியர் வாளேந்திக்கும், புத்தொளி மன்ற பொறுப்பாளர் இஞ்ஞாசி முத்துவுக்கும், உறுப்பினர்களுக்கும் எனது ஆழ்ந்த நன்றி.

அன்பன், **க. பா. செவ்வேலன்,**

பொன்மலை,

1-12-52.

கம்யூனிஸக் கொள்கையின் தந்தை

காரல் மார்க்ஸ்

(கதா காலட்சேபம்)

★

எழுதியவர்:

பொன்மலை, க. பா. செவ்வேலன்.

வெளியீடு:

★ புத்தொளி மன்றம், ★

பொன்மலைப்பட்டி,

பொன்மலை.

முதற்பதிப்பு] டிசம்பர், 1952. [விலை 2 அணா

காரல் மார்க்ஸ்

கொடி வாழ்த்து] [பாடலுரை

(ஜெயராமன் பாடிய காந்தி மகான் கதை முன்னெடுப்பு)

தியாகி பலரின் இரத்தச் சிவப்பால்
வியாபித் திருக்கும் வீரர் சூழ
வானளாவ பறக்கு(மெ)ம் கொடியே
வாழ்க நீ என்றும் வாழ்கவே...!
தொழில் வளமும் கலை உளமும் செழிக்க
தொண்டு செய்ய நீ(வீ)ர் வாரீரே
செங்கொடி தன்னை மார்பிலே ஏந்தி
சங்கம் அமைத்து வாழ்வோமே—தொழிற்
சங்கம் அமைத்து வாழ்வோமே!

வணக்கப்பாட்டு:

(கலைமுதலாக தொழில்வரையாக என்ற இசை)

கம்யுனிஸக் கொள்கையை லெனினுக்கு ஈந்த
பெருமையை அடைபவர் காரல் மார்க்ஸ்
பாட்டாளி மக்கள் வாழ புது(மை)
பாதையை காட்டிய அன்பர்—நமதரும்
காரல் மர்ர்க்ஸே—அவர் சரிதையைக்
கேட்பீரே, தோழரே, நீரும்... கம்யுனிசக்கொள்கையை

தொழிலாள மக்களே........காரல்மார்க்சுடைய சரித்திரத்தை இப்பொழுது நீங்கள் கேட்கப் போகிறீர்கள். அவர், வாழ்வில் ரொம்பவும் அல்லல் பட்டவர், வறுமையால் சிறுமைபட்டவர். அரசாங்கத்தாரால் அருவறுக்கப்பட்டவர். இத்தனைக்கும் காரல்மார்க்ஸ் செய்த குற்றம் என்ன தெரியுமா? பாட்டாளிகளுக்காப் பரிந்து பேசியது. உழைப்பாளிகளுக்காக உழன்று கொடுத்தது. தொழிலாளிகளுக்காத் தூதுசென்றது. அவருடைய வரலாறே வருத்தக்குழி! அப்படிபட்ட காரல்மார்க்ஸ்

பாட்டு:

(இசை—தமிழிச்சிந்து)

ஆயிரத்து தென்னூற்று பதினெட்டா மாண்டிலே
ஜெர்மனி நாடுதன்னில் உதித்தார்—சீரும்
சிறப்புடன் பெற்றோராலே யவர்
செல்வத்திலேயும் வளர்க்கப் பட்டார்

பையனாக யிருக்கும் போதே அவர் பராரி
வாழ்க்கையில் கொண்டார்—பள்ளிப்
படிப்பிலும் பாசங் கொள்ளாமலே ஏழையின்
வாழ்க்கையில் இன்னல் கண்டார்

தந்தையுமே மகனது போக்கைக் கண்டு
விந்தையில் வேதனை கொண்டோட—இந்த
உலகில் மார்க்ஸ் வாழவேண்டுமானால்
சொந்த ஊர்க்கல்வி உதவாதென்று

சட்டம் படிக்கத்தான் காரலையுமே
கிட்டேயுள்ள நகர் ஒன்றதனில்—திட்டமாய்ச்
சேர்ந்துத் திரும்பிவிட்டார் ரங்கே
கொட்டமடித்தார் காரலுமே

கல்லூரி வாழ்விலே காரல் பெரியார்
கண்ட அனுபவ உண்மையாலே—சமூக
வல்லூறுகளை வெல்லவுமே யவர்
தத்துவ நூல்கள் பல படித்தார்

தத்துவ நூல்களை ஆராயும் போதினில்
விஞ்ஞானத்தின் மேன்மைதனைக்கண்டு—நித்திய
நேரமும் கையில் புத்தகமும்
பென்சிலோடுமே காட்சி தந்தார்...

தோழர்களே! விஞ்ஞானமட்டுமல்ல, சரித்திர வரலாறு போன்ற நூல்களை அதிகம் படித்தார்.... படித்தார்....படித்துக்கொண்டேயிருந்தார். தாய் தந்தையரோ கண்ணீர் வடித்துக்கொண்டே யிருந்தார்கள். பெற்றோர் காசைக்கொட்டி கல்லூரிக் கனுப்பக்காரல் தத்துவங்களை, அதிலும் தொழிலாளி

முதலாளி இருவரிடையே உள்ள வேற்றுமைகளை ஆராய்ந்து கொண்டிருந்தார். உலகம் தோன்றிய நாளிலிருந்து—சமுதாயம் சிருஷ்டிக்கப்பட்ட நேரத்திலிருந்து தொழிலாளி—முதலாளி போராட்டம் நிகழ்ந்து கொண்டிருப்பதை மார்க்சின் மனம் ஏன்? ஏன்? ஏன் என்று கேட்க, அவரது மூளை சிந்திக்கத் தொடங்கியது. அதன் காரணமாகத்தான் கார்ல் மார்க்ஸ் உலகம் புகழும் உத்தமராக, தொழிலாளிகளின் கடவுளாக ஆனார். காரலை கடவுளாக்கிய கல்லூரி வாழ்வில் ஒரு நாள்.........

பாட்டு: (தில்லாலங்கடி என்ற இசை)

சோஸலிஷ சங்கமது கூடியது அவ்வூரில்
கூடியது அவ்வூரில்
வாசம் செய்யும் தலைவர்களும் ஒன்ருகவே சேர்ந்தாரே
ஒன்ருகவே சேர்ந்தாரே
காரலதைக் கண்டாரே—காரலதைக் கண்டாரே
சாரமுள்ள சரக்குகளும் சோஸலிஷக்கொள்கையில்
நிறைந்திருக்க அவர் மனதை வேறு வழியில்
[திருப்பினர்—சோஸலிஷ

இந்த சம்பவத்திற்குப்பிறகு காரல் மார்க்ஸின் வாழ்க்கைப்பாதை முள்ளும், கல்லும் நிறைந்த கரடு முரடானதாக மாறியது................

சோஸலிஷக் கொள்கை அவர் மனதிலே, மிகவும் ஆழமாகப் பதிந்து குமுறிக்கொண்டிருந்த அந்த நேரத்தில் மக்கள் ஜெர்மனியில் அலங்கோலமாக ஆளப்பட்டு வந்தனர். முதலாளிமார்களின் கைபொம்மையாக அரசாங்க அதிகாரிகள் இருந்து கொண்டு பாட்டாளி வர்க்கத்தை படாதபாடு படுத்தினர். உழைப்பாளிகளது இரத்தக் குழம்பால், முதலாளிகள் தங்களுடைய உல்லாசக்கோட்டைக்கு மெருகு கொடுத்துக்கொண்டு இருந்தனர். இந்த அநியாயத்தைத் தடுக்கத்தான் ஒரு சில உண்மையாளர்களால் "சோஸலிஷ அபேதவாத

சங்கம்" கூட்டப்பட்டது, ஜெர்மனியிலே-அதுவும் கார்ல் படித்த இடத்திலேயே...............

பாட்டு: (அம்மா நோதுதே என்ற இசை)

கண்டார் காரல் மார்க்ஸ்—கூட்டம் கூடியதைக்
கண்டார் காரல் மார்க்ஸ்
சிந்தனை பிறக்கவே சென்றாரே அங்கே
நிந்தனையில்லாத கொள்கைகளை மனதில்
[கொண்டார்—கண்டார்

மனதில் கொண்டார்—மாற்றம் கண்டார்
வாழ்வில் கண்டார்—மாற்றம் கண்டார்—கண்டார்

இப்படியாக அடிக்கடி அந்தசங்கத்துக்குச் சென்று, கூட்டத்தில் பங்கெடுத்துவந்த மார்க்ஸ் கல்லூரி வாழ்க்கையை வெறுத்து பாட்டாளி வர்க்கத்துக்காக பாடுபட உறுதி பூண்டு பிறந்த ஊருக்குத் திரும்பியவர் எப்படி தொழிலாளி இனத்துக்காக பாடுபடுவது என்று எண்ணத்தலைப்பட்டார். இரவும் பகலும் இடையறாது உழைப்பாளிகளின் உல்லாசத்துக்காக தனது மேலான ஜீவியத்தை உதறித்தள்ளிவிட்டு உழைத்தார். முடிவில், நாட்டின் நிலையை ஏட்டிலே தீட்டினார். தீட்டிய ஈட்டியென அவர் எழுத்துக்கள் மடாதிபதிகள், மன்னாதிபதிகள், மதோன்மத்தர்கள் எல்லோரையும் தாக்கியது. அச்சமயத்தில்தான் அவர் காதல் மலர் மொட்டு விரிய ஆரம்பித்தது.......

பாட்டு: (பயமென்னடி சிட்டி என்ற இசை)

காதலித்தார் காரல்
காதலித்தார்
பக்கத்து வீட்டுப் பெண்ணையும் காதலித்தார்
சிக்கனமான ஜென்னி [illegible] கொண்டாள்
அக்கரையோடவர் சந்திக்கக் கண்டார் பெற்றோர்
இருவரையும் சேர்க்க உறுதிபூண்டார்
—காதலித்தார்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக ...
181290
600 008

ஆனால் நிகழ்ந்தது விபரீதமானது. நெஞ்சு நடுங்க வேண்டிய நிலைமையைத் தருவிப்பது. அதிகாரிகளின் மட்டரகமானப்போக்கையும், முதலாளிகளின் கொடூரத்தன்மையும்-அதனால் தொழிலாளி வர்க்கம் படும் அவஸ்தைகளையும் கட்டுரைகளாக பல எடுகளில் எழுதிய குற்றத்திற்காக ஜெர்மனியை விட்டு அக்ரம ஆளவந்தார்களால் காரல் மார்க்ஸ் நாடுகடத்தப்பட்டார்....! ஐயோ....! பரிதாபம்....! ஜென்னிக்கும், காரலுக்கும் மணம் நடக்கப்போகும் சமயத்தில்தான் ஆட்சியாளர்களிடமிருந்து "வெளியே போ....!" என்ற உத்திரவு வந்தது. அதைப்பார்த்து ஜென்னி கண்ணீர் வடித்தாள்....

பாட்டு: (ஏழை எங்குசெல்வேன் என்ற இசை)

கண்ணீர் வடித்தாள் ஜென்னி —(கண்ணீர்)
மொட்டுவிரியும் போதினிலே நல்ல
உள்ளமாம் காதல்மலர்
சூழ் நிலைதானே சொட்டுகின்ற
வெப்பத்தால் பட்டு—(கண்ணீர்)
(வாழ்வு) கெட்டுவிடும் என்று எண்ணிய ஜென்னி
கண்ணீரையும் கடலாக்கினாள் —(கண்ணீர்)

ஆம் தோழர்களே, மார்க்ஸ் மனைவி கண்ணீர் கலங்கினாள்.... அழுதாள்.... ஜென்னியின் கண்ணீரைத் துடைத்தார் காரல்.... "திரும்பவும் ஒன்றாகக் கூடுவோம் கண்ணே! ஆறுதல் கொள்பெண்ணே!" என்று தேற்றினார் மார்க்ஸ் பெரியார். தொழிலாளிகளின் சுகத்துக்காக தனது மண வாழ்க்கையை பிண வாழ்வாக்கிகொண்டார் காரல், பாட்டாளிகளின் நண்பர் பிரான்ஸுக்குப் புறப்பட்டார்.

பிரான்ஸில் ஏங்கல்ஸ் என்ற பணக்கார நண்பனொருவனுடன் சேர்ந்து வாழலானார். தோழன் ஏங்கல்ஸ் காரலை உயிர் போல் நேசித்துக்காப்பாற்றி வந்தான். இந்த ஏங்கல்ஸ்தான் காரலின் நிழலாக கடைசிவரையிலும் இருந்து வந்தவன்.

உப்பரிகை வாசத்தை துச்சமென மதித்து காரல் மார்க்ஸின் சிஷ்யனுனன். சிறிது காலத்திற்குப் பிறகு பல நூல்களைப் படித்து, நுணுக்கமாகச் சிந்தித்து "கம்யுனிஸ்ட் அறிக்கை" என்றதொரு நூலை வெயிட்டார். அந்த அறிக்கைதான் இன்றைய முதலாளி வர்க்கத்துக்கு சாவுமணி அடித்துக் கொண்டிருப்பது. அங்கும்....

பாட்டு: (தெம்மாங்கு)

பிரபுக்களின் பிடியினுலே கஷ்டமே பட்டார்
அவர் கஷ்டமே பட்டார்
துஷ்டர் செயுலால்—(அவர் கஷ்டமே)
கம்யுனிஸ்ட் அறிக்கையிலே குற்றமிருக்கு என்று
வம்பர்கள் கூறியதால் கடத்தப்பட்டாரே...
கடத்தப்பட்டாரே நாடு கடத்தப்பட்டாரே.

நாட்டைவிட்டு ஓட்டப்பட்டு, பிரான்சிலிருந்து கிளம்பிய காரல் மார்க்ஸ் ஜெர்மனிக்கு வந்தார். வந்தவுடன், அவரையே மணப்பேன் என்ற பிடியான உள்ளத்தோடு "ஏழு" ஆண்டுகள் இருந்த உத்தமி ஜென்னியார், காரலுக்கு அன்புமாலையிட்டு மனைவியானர்....அவர்களது கல்யாணம் எப்படி நடந்தது என்ருல்....

பாட்டு: (நம்ம கல்யாணமேடி என்ற இசை.)

இருவரும்: கல்யாணமே நம்ம கல்யாணமே
களிப்புக்கொள் மணமே—நாம் தினமே
உல்லாசமாய் (நாம்) இருப்போமே

ஜென்னி: ஆருயிரே ஆத்ம நாதா சீர்பெறவே
புவிமீதே நாம் வாழ்ந்திடுவோம்—
எந்நாளும் தானே.

காரல்: பிரிய நாயகி...நேரிய வழியில்...ஓ...ஓ...ஓ
ஊறிய கொள்கையில் ஓங்குவோம்—என்றும்
சீரிய வாழ்விலே...

இருவரும்: இணைபிரியாமலே வாழ்ந்திடுவோம்
எந்நாளும் தானே—(கல்யாணமே)

இந்த முறையிலே இன்பமாக அவர்கள் கல்யாணச் சடங்கு நிறைவேறியது. ஆனால் அதி விருந்து வறுமையும் ஒட்டிக்கொண்டது. இந்நிலையில் "நண்பர்களின் கேலிப்பேச்சு! அதிகாரிகளின் அடக்குமுறை! பத்திரிகையாளர்களின் பராமுகம்!" எல்லாம் வேறு மார்க்ஸை படாத பாடு படுத்தியது. அப்படியிருந்தும் தொழிலாளிகளுக்காக பாடுபடும் பல இயக்கங்களில் காரல் முழுப்பங் கெடுத்துக்கொண்டார். இவ்வித இடுக்கண்களுக் கிடையில் மனைவியின் ஆறுதல் மொழியும், ஏங்கல்ஸின் எதிர்பாராத உதவியும்தான் மார்க்ஸை மனிதனாக மாநிலத்தில் உலவச் செய்துவந்தது. அப்போது லண்டனில் ஒரு மகாநாடு கூடியது. அதற்கு காரல் மார்க்ஸ் தலைவராகப் போனார், தனியாகவல்ல, குடும்பத்துடன்தான். ஏங்கல்ஸும் காரலைப்பின் தொடர்ந்தான்—அதற்குப் பிறகு அவர்கள் ஜெர்மனிக்குத் திரும்பவேயில்லை, அங்கே தான் வாழ்நாளை போக்கி வந்தார்....பின்னும் பல கஷ்டங்கள்....சகிக்க முடியாத துன்பங்கள்....அந்த நிலையிலே...

பாட்டு: (பஞ்சமும் பட்டினியும் என்ற இசை.)

வஞ்சமும் வறுமையும் சுற்றிக்கொல்லுதடி
நஞ்சுதான் ஆறுதலோ—அடி ஜென்னி
வாழுவகை கூறடி—அடி ஜென்னி
வாழுவகை கூறடி

என உள்ளம் சோக காரல் தன் மனைவியிடம் பலதரம் சொல்வார் அவ்வித சுற்றுச்சார்பிலும் உழைப்பாளிகளுக்கான, நல்வாழ்வைக்காண அவர் பாடுபட்டுக் கொண்டுதானிருந்தார்.... பிள்ளையின் பூட்ஸை விற்று கதை, கட்டுரைகளை பத்திரிகைகளுக்கு அனுப்பக்கூடிய நிலைதனில் மார்க்ஸ் வாழ்ந்தார் என்று நாம் கேள்விப்படும் பொழுது கண்ணீர்தான் முந்திக்கொண்டு நமக்கு வருகிறது. அப்பொழுதும் ஏந்தல் ஏங்கல்ஸும் இலட்சியவாதி

யான காரலுடன் உதவியாக இருந்து வந்தான். எப்பொழுதோ வறுமையின் கோரப்பசிக்கு இரையாகிவிட வேண்டியவரை வாழவைத்துக்கொண்டிருந்தான் ஏங்கல்ஸ். ஏமாளிகளின் எக்களிப்பான பேச்சும், கோமான்களின் கொடூரப்பார்வையும், சீமாட்டிகளின் சீறலும், பிரபுக்களின் பெருமூச்சும் எழுந்து கொண்டிருந்த சமயம் காரல் மார்க்ஸ் வெளியிட்டார் "காபிடல்" அதாவது மூலதனம் என்றதொரு அரிய நூலை....அவ்வாராய்ச்சி பொக்கிஷமான மூலதனம்....

பாட்டு: (மேரெ பச்சுபன்கே என்ற இசை)

மண்ணதிலே பாட்டாளிகள் ஓங்கிவாழ
மார்க்கம் தன்னையே நமக்கு காட்டிடும் மூலதனமே
கண்ணான தொழிலாளி கஸ்தியையுமே
மண்ணாக்கிப் போட
வந்த மாபெரும் மூலதனமே

எந்நாளும் முதலாளிகள் நமை வணங்க... ஆ... ஆ...
பொன்னான கொள்கைதனையே
கொண்டதது ...(மண்ணதிலே)

இப்பேர்ப்பட்ட மூலதனம்வெளியாகிவந்த பிறகுதான் காரலின் பெருமையை மக்கள் உணரலானார்கள்.

அவர் எழுதிய நூல்களில் மிகவும் சிறந்தது. மூலதனம். அம்மூலதனத்தில் முதலாளி தொழிலாளி இருவர்க்கத்தின் வேறுபாடுகளை நன்குவிளக்கியதோடு மட்டுமல்லாது பாட்டாளி வர்க்கத்துக்குத்தான் அரசாங்கம் சொந்தம்! தொழிற்சாலைகள் சொந்தம்! எல்லாம் சொந்தம்! என்று கூறியுள்ளார். இப்படியாக வறுமை உலகில் வாழ்ந்து சிறுமைப்பட்டு கடைசியில் 1883-ம் ஆண்டில் காரல் மார்க்ஸ், தனது இன்னுயிரை இழந்து விண்ணகஞ்சென்றார், வானத்தில் தோன்றி மினுக்கென மறையும் மின்னலைப்போல....

பாட்டு: (பறந்து செல்லும் பைங்கிளியே என்ற இசை)

வானில் தோன்றும் மின்னலைப்போல்
மறைந்து போனாரே நம் காரலே...

சூழ்நிலையே பகைத்தாலும்
சுருதியுமே மாறாது—சுக
கீதம் பாடினாரே—பாட்டாளி(கள்)
வாழவேதான் பாரிலே
தொழிலாளிகள் கடவுளாக
எழில் வாழ்வுதனைத் தந்து
இகத்தையுமே மறந்தே—அவர்
நம்மை விட்டே பிரிந்தார் - உயிர் காரலே
(வானில் தோன்றும்)

அவரது கல்லறை அருகில் ஏங்கல்ஸ், ஒருநீண்ட பிரசங்கத்தை கண்ணீர் வெள்ளமாக்கினான். அதில் காரலது வரலாற்றையெல்லாம் வடித்துவிட்டான். மாளிகையிலே பிறந்து, தொழிலாளி வர்க்கத்துக்காக வாழ்வு முழுவதும் பாடுபட்டு உயிரிழந்த அவ்வுத்தமரை நம்மால் மறக்கமுடியாது. அவர் நாமத்தை நாம் என்றென்றும் வாழ்த்த கடமைப்பட்டிருக்கிறோம்— வாழ்க காரல் மார்க்ஸ்!

ஓங்குக அவர் தம் புகழ்!

உயர்வடைக பாட்டாளி வர்க்கம்!

வணக்கம்!

★ கொடி வாழ்த்து ★



அறிவைப்பெருக்க ஆசை...
அப்படியானல்
பொன்மலை, **புத்தொளி மன்றத்தார்** வெளியிடப்போகும்
அடுத்த புத்தகத்தை எதிர்பாருங்கள் !

— இதோ அதற்கொரு முன் குறிப்பு —

சரித்திரம் விளக்கிடும் சம்பவங்களில் சமதர்மக்
கருத்தைத் தந்திடும் வரலாறுகள் அநேகமுண்டு
அதில் ஒன்றுதான்......?

எரிந்த ஏதென்ஸ்

(தழுவல் கற்பனை)

இந்நூலின் ஆசிரியர் இதைப் பற்றிய நுணுக்கமான
விளக்கங்களை தன் பேனு முனையில் குத்திக்கிளறுகிருர்,
குமுறும் உள்ளத்தோடு.

அவர் யார்? அவசரம் வேண்டாம்!

— புத்தகமே விரைவில் புதிரைப் போக்கிடும் —

★ ★ ★

வாழ்க தமிழ் ! வளர்க கலை !

விரைவில் எதிர்பாருங்கள் !

பொன்மலை, புத்தொளி மன்றத்தாரின்
புரட்சி முரசான

"ஆளவந்தார்கள்"

(நாடகம்)

கதை, வசனம்: பொன்மலை, **வாளேந்தி.**
பாடல்கள்: வல்லம், **கடூரன்.**
பயிற்சி: **ஏ. எஸ். மோகன் – ந. சி. வேலேந்தி.**
தலைவர்: **சி. சவுரிமுத்து.**

குறிப்பு:— பிரபல திரைப்பட நடிகர்கள், பத்திரிகாசிரியர்கள்
எமது நாடகத்தில் கலந்துகொள்வார்கள்.

இது விளம்பரம் மட்டுமல்ல; வேண்டுகோள் கூட !

எதற்கு?

பொன்மலையில், பெரும்புயலுக்குப் பின் அமைதிதந்திட!

எங்கு ?

ஸ்ரீ மங்களாம்பிகா லஞ்ச் ஹோம்

(பொன்மலைப்பட்டி.)

நித்திக்கும் பண்டங்கள், நீங்கள் சித்திக்கும் காரங்கள்

களைப்பு போக்கிட காபி, தேநீர், ஓவல்

முதலான முதல்தர பானங்கள்

சகல வசதிகளுடன் சாப்பாடும்கூட உங்களுக்கு

அளித்து ஆனந்தம்தர ஆசிப்பதோடு

உங்களின் **மேலான ஆதரவையும்** விரும்புகிறார்கள்

யார்?

உங்களுக்கு நன்கு அறிமுகமானவர்கள்தான்

C. வையாபுரி & S. கிருஷ்ணமூர்த்தி அய்யர்,

(ஸ்ரீ மங்களாம்பிகா லஞ்ச் ஹோம் உரிமையாளர்கள்.)

ரயில்வே தொழிலாளர் அச்சகம், பொன்மலை,